# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

**அசல் வழக்கு எண். 132/2022**

பெயர் : கருணாநிதி (PW1)

த/க/பெ. :

தேதி : 08.02.2024

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வழக்கு சொத்து மொத்தம் 15 அயிட்டம். அதில் எத்தனை இன சொத்துக்கள் நஞ்சை மற்றும்புஞ்சை என்பது எனக்கு தெரியாது.வழக்கறிஞரை கேட்டால்தான் தெரியும். தாவாச்சொத்துக்கள் என் தந்தைக்கு சொந்தம் என்றால் என்தந்தை பெயரில் நாங்கள்கிரையம் பெற்றுள்ளோம். நான்என்த ந்தை பெயரில் சொத்துக்களில்கிரையம் பெற்றுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் என்ன என்ன சொத்துகு்கள் என்று எனக்கு தெரியாததற்கு குறிபட்ட காரணம எதாவது உள்ளதா என்றால் இல்லை. நான் 15 அயிட்டம் சொத்துக்கள் குறித்தும் சர்வேஎண், விஸ்தீரணம், நான்கெல்லை, வகைபாடு தெரியாது என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த எந்த சொத்துக்களை யார் யாரிடம் எந்த தேதியில் எவ்வளவு தொகைக்கு கிரையம்பெற்றுள்ளேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான். தாவாச்சொத்துக்களுக்கு என் தந்தை பெயரில்பட்டா உள்ளது ஆனால் நீதிமன்றத்தில்தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1982 ல் என்னுடைய வயது தோரயமாக 20 வயது என்றால் சரிதான். 20 வயதில் என் தந்தை பெயரில்அவ்வளவு சொத்துக்கள் வாங்க வாய்ப்பில்லை என்றால் நான் 1979 ல் வெளிநாடு சென்றேன் அந்த பணத்தில் வாங்கினார். வெளிநாட்டில் இருந்ததற்கான ஆதாரம் மற்றும் இங்கு பணம் அனுப்பியதற்கு ஆதாரம்தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால்வைத்துள்ளேன். அனைத்து சொத்துகளும் 1982, 1983, 1984 வாங்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் வழக்குரையில் தவறாக 1982 முதல் 2005 வரை வாங்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பக்கம் 2 ல் 4 வது பத்தியில்4 வது வரியில் 1,2 பிரதிவாதிகள் 78 முதல்2005 வரையிலும் 1979 முதல் 2008

வரையிலும் வெளிநாடு சென்று சம்பாதித்த பணத்தைக்கொண்டு பெரும்பாலான சொத்துக்கள் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் அது தவறு. என் தந்தைக்கு வாதிகளாகிய நாங்கள் எவ்வளவு தொகை எந்த வகையில்வெளிநாட்டில்இருந்து அனுப்பினோம் என்ற விவரத்தையும் எவ்வளவு சொத்துக்கள் வாங்கினார் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால்சரிதான். தாவாசொத்துக்களின் என்னுடைய வீட்டை சேர்த்துள்ளேன் எத்தனையாவது அயிட்ட சொத்து என்பது தெரியாது. ஏற்கனவே கூரை வீடு இருந்து அதை ஒட்டுவீடாக மாற்றியுள்ளேன் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த ஆண்டு கூரை வீட்டை மாற்றினோம் என்பது குறித்தும் எந்த தொகை எப்படி அனுப்பினோம் என்ற விவரத்தையும்வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 10 வது அயிட்ட சொத்து என் தாயார் பெயரில் உள்ள விவசாய நிலம். 1984 ல் வாங்கப்பட்டது. அதற்குண்டான தொகையை வந்தவர்களிடம் கொடுத்து அனுப்பியதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன். அவ்வாறு கொடுத்து அனுப்பியிருந்தால் அது வரிஏய்ப்பு என்றால் சரியல்ல. அவ்வாறு பணம் கொத்து அனுப்பியதாக வழக்கில்சொல்லவில்லை என்றால் சரிதான். 1979 முதல் 2008 வரை எந்த நாட்டில் என்ன வேலை செய்து எவ்வளவு பணம்சேமித்து என் பெற்றோருக்கு அனுப்பினேன்என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வெளிநாட்டில் இருந்து சொத்துக்கள் வாங்குவதாற்கு என் பெற்றோருக்கு தபால்அனுப்பினேன் என்றும்அது தொடர்பாக வழக்குரையில் சொல்லியுள்ளனோ என்றால்இல்லை. முதல்பிரதிவாதி எனது அண்ணன். அவர்என்பெற்றோருடன் இந்தியாவில்இருந்தார் என்றால் சரிதான். 2,3 பிரதிவாதிகள் ஏதோ ஒப்பந்தத்தின்பேரில் சாகுபடி செய்துவருகிறார்கள். எவ்வளவு ஆண்டுகளாக சாகுபடி செய்து வருகிறார் என்பது எனக்கு தெரியாது. வழக்கிற்கு பின்னிட்டும் எதன்அ டிப்படையில் 2, 3 பிரதிவாதிகள் சொத்தின் சுவாதீனத்தில் இருக்கிறார்கள்என்பதை தெரிந்துக்கொள்ளவில்லை சாகுபடி செய்து வருவது மட்டும்தான்தெரியும். 2,3 பிரதிவாதிகள் வழக்கில்எதிர்கட்சி நடத்தி வருவது தெரியும். அவர்கள் என்ன கட்சி எடுத்துஉள்ளார்கள் என்பதை தெரிந்துக்கொண்டேன். ஒப்பந்தப்படி சாகுபடி செய்வதாக சொல்லியுள்ளார்கள்.எதிர்வழக்குரையில் 12 மா 45 குழி சொத்தை 16.05.2005 ல் ரூபாய் 4,75,400/-கிரையம்பேசி உடன்படிக்கை செய்துக்கொண்டார்கள் என்றால் அது குறித்து தெரியாது. அதே தேதியில் எங்கள் இருவருக்காக

முதல்பிரதிவாதி 3,84,000/-முன்தொகையாக பெற்றக்கொண்டு மீதி தொகையும் 2302.2006 ல்வரவு வைத்துள்ளார்கள என்றால் அது குறிதது தெரியாது. எதிர்வழக்குரையில்இந்த விவரத்தை சொல்லியுள்ளார்கள் என்றால் அது குறிதது தெரியாது. அதை மறுத்து என்முதல்விசாரணையில் நான் எதுவும் சொல்லவில்லை என்றால்சரிதான். தாவாச்சொத்துக்களை எங்கள் குடும்பத்தார் 2,3 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றாலுமஅவர்கள் நல்ல எண்ணத்தில் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றாலும் சரியல்ல. அந்த கிரையத்திற்காக வெளிநாட்டில்இருந்து வாதிகளாகிய நான் கடிதம் மூலம் அனுமதி கொடுத்துள்ளோம்என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் முதல் பிரதிவாதியிடம் எங்கள் பாகத்திற்கா தலா ரூபாய் 50,000 பெற்றுள்ளோமஎன்றால்சரியல்ல. அதனால்தான் 2005 இருந்து 16 ஆண்டுகளாக அவர்கள் சாகுபடி செய்து வருவதை தடுக்கவில்லைஎன்றால்பல முறை கேட்டுள்ளோம். இந்தவிரத்தை வழக்குரையில் சொல்லவில்லை. 2018 ம் ஆண்டு நிலம் வாங்கியவர்கள் மீது நாகப்பட்டினம் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில்புகார் மனு கொடுத்தோம்எ்னறால் சரிதான்,,அதில்இரு தரப்பிலும்விசாரித்தார்கள் என்றால்சரிதான். அந்த விசாரணையில் முதல்பிரதிவாதி நிலத்தை விற்பனை செய்ய நாங்கள் கடிதம் மூலம் அனுமதி கொடுத்ததாக கடிதத்தை காட்டியதால் சிறப்பு பிரிவில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நிலம்விற்பது தொடர்பாக நாங்கள் கடிதம்எதுவும் அனுப்பவில்லை. நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில் எங்கள்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த விவரத்தை வழக்கறிஞர்அறிவிப்பில் சொல்லியுள்ளேன். பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் உள்ள விவரங்களை நான் தெரிந்துக்கொள்ளவில்லை. தாவாச்சொத்துக்கள் எங்களுக்கு தெரிந்தே 1 ம்பிரதிவாதியால் 2,3 பிரதிவாதிகளுக்கு கியைரம்கொடுக்கப்பட்ட விவரம் தெரிந்து பாகப்பிரிவினை வழக்கு போட்டது சட்டப்படியல்ல என்றால்சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**2,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முதல் பிரதிவாதி**